அவள் விகடன்

ஜி.ஸ்ரீவித்யா

# 'எங்க வீட்டுப்பிள்ளை' எம்.ஜி.ஆரும் பில்கேட்ஸின் மைக்ரோ சாஃப்ட்டும்!

## நடந்தது என்ன?

பொதுவாக பில்கேட்ஸ் பற்றி பேசும் போதுதான் அவரது நிறுவனமான மைக்ரோ சாஃப்ட்டையும் குறிப்பிடுவோம். ஆனால், இந்த முறை மைக்ரோசாஃப்ட்டின் பெயர் மட்டும் தனியே அடிபட்டது. அடிபட்டது என்றால் நிஜமாகவே 'அடி'தான் பட்டது.

உலகின் 70 சதவிகிதத்துக்கும் மேலான கம்ப்யூட்டர்களும், லேப்டாப்புகளும் மைக்ரோசாஃப்ட்டின் விண்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்தையே நம்பியுள்ளன. இப்போது பில்கேட்ஸ் ஒரு 'ரிட்டையர்டு தாதா'வாக இருந்தாலும், இன்றும் டிஜிட்டல் என்கிற பேட்டையில் அவர் இல்லாமல் அணுவும் அசையாது என்கிற நிலைதான் உள்ளது. இவ்வளவு தூரம் விண்டோஸை சார்ந்திருக்கும் காலத்தில், ஏதேனும் சிறு குழப்பம் நிகழ்ந்தாலும் என்னாவாகும்? என்னென்னவோ ஆகும் என்பதைத்தான் ஜூலையின் மூன்றாம் வார நிகழ்வுகள் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி அதிர்ச்சி யடைய வைத்தன.

கடந்த ஜூலை மாதம் 19-ம் தேதியன்று திடீரென உலகம் முழுவதும் விண்டோஸ் முடங்கியது. கம்ப்யூட்டரை அதிகம் சார்ந் திருக்கும் விமானப் போக்குவரத்து போன்ற சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இந்தப் பெரும் குழப்பத்துக்கு மைக்ரோசாஃப்ட்டின் தவறுதான் காரணம் என்று பலரும் திட்டித்தீர்க்கத் தொடங்கி னார்கள். அதன்பிறகே பிரச்னைக்கு உண்மை யான காரணம் விண்டோஸ் இல்லை. ஆன்டி வைரஸ் சாஃப்ட்வேர் ஒன்றுதான் காரணம் என்பது தெரிந்தது.

'எங்க வீட்டுப்பிள்ளை' திரைப்படத்தில். வேலை இல்லாத எம்ஜிஆர், ஹோட்டலில் வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டுச் சென்று விடுவார். அடுத்து வரும் அப்பாவி எம்ஜிஆர், இரண்டு இட்லி சாப்பிடச் சென்று மாட்டிக் கொள்வார். அந்தப் பழைய கதைதான் இப் போதும் நடந்துள்ளது. வேறு ஒரு நிறுவனம் செய்த தவற்றுக்கு மைக்ரோ சாஃப்ட்டுக்கு தர்ம அடி விழுந்தது. அதன் பிறகு கிரவுட் ஸ்டிரைக் செக்யூரிட்டி சாஃப்ட்வேர் குறித்தும் மைக்ரோசாஃப்ட் நிறுவனமே விளக்க மளித்தது. புதிய அப்டேட்டை டெலீட் செய்துவிட்டு, ரீஸ்டார்ட் செய்தால் நிலைமையை சரி செய்யலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அதன் பிறகே கொஞ்சம் ஆசுவாசம் ஏற்பட்டு நிலைமை இயல்புக்குத் திரும்பியுள்ளது.

இன்று உலகமே கணினி மயமாகிவருகிற சூழலில் அனைவருமே ஏதோ ஒருவகையில் டிஜிட்டலுடன் தொடர்பு கொண்டிருக் கிறோம். இதுபோன்ற சூழல் இதற்கு முன்பு நடந்துள்ளதா, இனி இப்படி நடக்காமல்

அவள் விகடன்

இருக்க என்ன செய்ய வேண்டும் என சென்னையைச் சேர்ந்த கணினி தொழில்நுட்ப ஆலோசகரும், 'K7 Computing' நிறுவனத்தின் இயக்குநருமான கேசவர்தனனிடம் பேசினோம்.

"ஒரு கம்ப்யூட்டர் இயங்க OS என்கிற ஆபரேட்டிங் சிஸ்டமும் தேவை. அதன் இயக்கத்தைப் பாதுகாக்க Security software-ம் தேவை. பெரும்பாலானோர் விண்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்தை பயன்படுத்துகிறோம். குறிப்பாக, மிகவும் முக்கியமான நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் Windows 10 என்கிற ஆபரேட்டிங் சிஸ்டம் பயன்படுத்தப்படுகிறது. இதன் அடுத்தகட்டமாக Windows 11 கூட சிலர் பயன்படுத்துகிறார்கள்.


விண்டோஸ் 10 என்கிற ஆபரேட்டிங் சிஸ்டத்தை பயன்படுத்தியவர்களின் கம்ப்யூட்டர்களே ஜூலை 19-ம் தேதியன்று முடங்கின. மற்ற விண்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்தை பயன்படுத்தியவர்களுக்கு பாதிப்பு இல்லை. இந்தப் பிரச்னைக்கு முழுமையான காரணம் 'கிரவுட் ஸ்டிரைக்' (Crowd strike) என்கிற நிறுவனம்தான். எல்லோருக்கும் புரியும்படி சொன்னால் இது ஆன்டி வைரஸ் சாஃப்ட்வேர் (Antivirus software) வழங்கும் நிறுவனம். விண்டோஸின் பாதுகாப்பு அம்சங்களை இந்த கிரவுட் ஸ்டிரைக் நிறுவனம்தான் கவனிக்கிறது.

ஜூலை 18-ம் தேதியன்று புதிய அப்டேட் ஒன்றை கிரவுட் ஸ்டிரைக் நிறுவனம் சேர்த்தது. அந்தப் புதிய அப்டேட்டை சரிவர பரிசோதிக்காமல் அமல்படுத்தியதன் விளைவாகவே விண்டோஸ் முடங்கியது. கம்ப்யூட்டர் புரொகிராமிங் என்பது ஒரு நேர்கோட்டில் பயணிப்பது; 1, 2, 3, 4, 5 என ஒரு வரிசையாகத்தான் தனக்கு எழுதப்பட்ட புரொகிராமின்படி கம்ப்யூட்டர் இயங்கும். மனிதர்கள் எதிர்பாராத சூழல் வருகிறபோது அதற்கேற்றாற்போல் சிந்தித்து செயல்முறைகளை நாம் மாற்றுகிறோம். கம்ப்யூட்டருக்கு அப்படி செய்யத் தெரியாது. புதிதாக வந்த அப்டேட்டை விண்டோஸ் 10 ஆபரேட்டிங் சிஸ்டத்தால் உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை. இதனால் எனக்கு எதுவும் தெரியாது




கேசவர்தன்

/avalvikatan




## இதற்கு முன்பு வந்த Y2K பிரச்னை

**க**ம்ப்யூட்டர் உலகில் இதற்கு முன்பு Y2K என்கிற பெரிய பிரச்னை ஏற்பட்டுள்ளது. அதுவரை கணினிகளில் இரட்டை இலக்கத்தில் வருடத்தைக் குறிப்பிட்டு வந்தோம். 96, 97, 98, 99 என்று குறிப்பிட்ட பிறகு மீண்டும் அது 00 என்றே 2000 ம் ஆண்டைக் கணக்கிடும் என்கிற அச்சம் இருந்தது. இதனால்தான் Year 2 Thousand என்றே அந்தப் பிரச்னை குறிப்பிடப்பட்டது. Y2K குறித்து முன்பே எல்லோருமே அறிந்திருந்தார்கள். எனவே, அதற்கான தீர்வினையும் விரைவாகக் கண்டறிந்து சமாளித்து விட்டார்கள். ஆனால், இப்போது ஏற்பட்டிருக்கும் செக்யூரிட்டி சாஃப்ட்வேர் அப்டேட் பிரச்னை யாருமே யூகிக்காதது. திடீரென ஏற்பட்டதால் சமாளிக்க முடியவில்லை. எதிர்கால நடவடிக்கைகளுக்கு இது ஒரு பாடமாகவும் நமக்கு அமைந்துள்ளது.

என்பதுபோல் உடனடியாக ப்ளூ ஸ்க்ரீனை எல்லா கம்ப்யூட்டர்களிலும் காண்பித்தது. இதை *Blue screen of death* என்று கூறுகிறோம். விமான டிக்கெட்டுகளின் போர்டிங் பாஸ் பெற முடியாமல் போனதுக்கெல்லாம் இது தான் காரணம்.

2019-ம் ஆண்டு கொரோனா வைரஸ் வந்த போது உலகமே முடங்கியது. அதுபோல் டிஜிட்டல் உலகில் ஏற்பட்ட தாக்குதல் இது என்று சொல்லலாம். இதற்கு முன்பு இப்படி நடந்ததில்லை. இப்படி ஒரு பிரச்னை வரும் என யாரும் யூகிக்கவும் இல்லை. இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுகிறபோது 'பேரிடர் மேலாண்மை' (*Disaster Management*) பற்றி பேசுகிறோம். அதேபோல் கணினி உலகிலும் இதுபோன்ற பேரிடர் மேலாண்மை பற்றி திட்டமிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் செக்யூரிட்டி சாஃப்ட்வேர் எழுதும் நிறுவனங்களின் பெரும் பொறுப்பாக 'வும் மாறியுள்ளது. அதனால்தான் இன்று ஆன்டிவைரஸ் சாஃப்ட்வேர் என்கிற வார்த்தையைக் கூட செக்யூரிட்டி சாஃப்ட்வேர் (*Security software*) என்று மாற்றியிருக்கிறோம். காரணம், இதற்கு முன்பு வைரஸிடமிருந்து கம்ப்யூட்டரை பாதுகாப்பது தான் முக்கியப் பிரச்னையாக இருந்தது. ஆனால், இன்று தொழில்நுட்பம் அசுர வளர்ச்சியடைந்திருக்கும் சூழலில் எந்த ரூபத்திலும் அச்சுறுத்தல் வரலாம் என்கிற நிலை உள்ளது. எனவேதான் அதை செக்யூரிட்டி சாஃப்ட்வேர் என்றே சொல்கிறோம். அத்தகைய செக்யூரிட்டி சாஃப்ட்வேர் எழுதுகிறவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் எழுத வேண்டும். அதை வேகமாகப் பரிசோதித்து தங்களை நம்பியிருக்கும் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

செக்யூரிட்டி சாஃப்ட்வேரை சார்ந்திருக்கும் நிறுவனங்களும் இனிமேல் 'ஆட்டோ அப்டேட்' (*Auto update*) முறையில் இருந்து மாற்றம் செய்ய வாய்ப்புண்டு. ஏனெனில், கிரவுட் ஸ்டிரைக் சாஃப்ட்வேர் ஆட்டோ அப்டேட்டானதன் விளைவாகத்தான் விண்டோஸ் முடங்கியது. எனவே, இனி நிறுவனங்களும் ஆட்டோ அப்டேட்டை விரும்புவது குறையலாம். ஆட்டோ அப்டேட்டில் இருக்கும் ஒரு வசதி, புதிய அச்சுறுத்தல் உடனடியாகத் தடுக்கப்படும்.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அப்டேட் செய்ய முடிவெடுப்பதில் இன்னொரு சவாலும் உள்ளது. அப்டேட்டை தாமதித்தாலோ, அலட்சியப்படுத்தினாலோ பெரும் சிக்கலைச் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, மேனுவல் அப்டேட் செய்வதாக இருந்தாலும் அதை விரைவாகச் செய்ய வேண்டும். சோதனை ஓட்டமாக, புதிதாக வரும் செக்யூரிட்டி அப்டேட்டை தங்களது நிறுவனத்திலிருக்கும் ஏதேனும் ஒரு கம்ப்யூட்டரில் பரிசோதித்த பிறகு மற்ற கம்ப்யூட்டர்களுக்கும் அப்டேட் செய்யலாம்'' என்கிறார்.